**செய்தி வெளியீடு எண்: 009** **நாள்: 02.01.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

அதிக அளவில் நிலுவையாக உள்ள ஆவணங்களைத் தீர்வு செய்யும் நோக்குடன், பொது மக்களும் தங்களது பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை விரைவாகத் திரும்பப் பெறவும், இத்தகைய ஆவணங்களில் முடங்கியுள்ள அரசு வருவாயை வசூலிக்கவும் ஏதுவாக, பதிவுத் துறையில் 3.1.2018 முதல் **சமாதானத் திட்டம்** அறிமுகப்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின்படி, பொது மக்களால் பதிவு செய்யப்பட்டு, இந்திய முத்திரைச் சட்டப் பிரிவு 47ஏவின்படி நிலுவையாக உள்ள ஆவணங்களை, வழிகாட்டி மதிப்புப்படி செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக்கும், ஏற்கனவே செலுத்தியுள்ள முத்திரைத் தீர்வைக்கும் இடையேயான வேறுபாட்டில் மூன்றில் இரண்டு பங்கை (அதாவது 2/3) மட்டும் செலுத்தி திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். 8.6.2017 அன்றுள்ளவாறு பிரிவு 47ஏவின்படி சந்தை மதிப்பை நிர்ணயம் செய்ய நிலுவையாக உள்ள ஆவணங்களுக்கும், பிரிவு 47ஏவின்படி சந்தை மதிப்பை நிர்ணயம் செய்ய அனுப்புவதற்காக பதிவு அலுவலர்களிடம் நிலுவையாக உள்ள ஆவணங்களுக்கும் இத்திட்டம் பொருந்தும். மேலும், வித்தியாச முத்திரைத் தீர்வையை சம்மந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகத்திலேயே செலுத்தலாம். இத்திட்டம் 3.1.2018 முதல் மூன்று மாதங்களுக்கு அமலில் இருக்கும்.

பதிவு செய்யப்பட்டு, பிரிவு 47ஏவின்படி நிலுவையாக உள்ள ஆவணங்களைப் பதிவு செய்த பொது மக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**